**கோயமுத்தூர் முதன்மை மாவட்ட நீதிமன்றம், கோயமுத்தூர்**

**O.S.No.49/2023**

PW - 3

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 25 ஆம் நாள் புதன்கிழமை அன்று திருமதி ஜி.விஜயா, B.A.,M.L., PGDCFS முதன்மை மாவட்ட நீதிபதி, கோயமுத்தூர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | ஜானேஸ்வரன் |
| தகப்பனார் பெயர் | |
| வயது | |
| முகவரி | |

**முதல் விசாரணை**

நான் அசல் வழக்கில் மூன்றாவது பிரதிவாதி வங்கியில் வங்கி மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் அடிப்படையில் வா.சா.3 ஆக சாட்சியம் அளிக்கிறேன். எங்களது வந்த அழைப்பாணை **நீ.ம.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எங்கள் வங்கியில் தனபால் என்வர் சேமிப்பு கணக்கு வைத்திருந்தார். அந்த சேமிப்பு கணக்கு எண்.10027112892 ஆகும். 18-05-2021 ல் அந்த சேமிப்பு கணக்கில் ரூ.16,80,570-66 பைசா இருந்தது. மேற்சொன்ன சேமிப்பு கணக்கு தனபாலின் தனிப்பட்ட கணக்காகும். அந்த வங்கி கணக்கு இன்றுவரை முடிக்கப்படாமல் 2022 லிருந்து Inoperative ஆக உள்ளது. 04-06-2021 அன்று ரூ.1000/- மற்றும் ரூ.9,99,000/- மும், 05-06-2021 ரூ.6,87,000/- மும் ஆக இரண்டு தினங்களில் ஆன்லைன் பரிவர்த்தனை மூலமாக கணக்கு எண்.31113325874 உரிமையாளர் பெயர் சரஸ்வதி என்ற எண்ணுக்கு மாற்றப்பட்டுள்ளது. அந்த வங்கி கணக்கும் ஸ்டேட்பேங்க் ஆப் இந்தியா வங்கிதான். ஆனால் எந்த கிளை என்று என்னால் கூற இயலாது. மொத்தமாக மேற்சொன்ன இரண்டு தினங்களிலும் ரூ.16,87,000/- மாற்றப்பட்டுள்ளது. மேற்சொன்ன தனபால் அவர்கள் 18-05-2021 ல் காலமாகி விட்டார் என்று சொன்னால் அந்த தகவல் எங்கள்

வங்கிக்கு வரவில்லை. பொதுவாக தனிப்பட்ட கணக்கிலிருந்து, அந்த தனிப்பட்ட நபர் இறந்து விட்டால் பணி பரிமாற்றம் நடைபெற கூடாது. அவ்வாறு பண பரிமாற்றம் நடைபெற்றிருந்தால் அது சட்டப்படி தவறு. இந்த வழக்கின் வாதி விக்னேஷ் எங்கள் வங்கியில் அவரது தகப்பனார் இறந்து விட்டதாகவும், அவரது கணக்கில் சட்டத்திற்கு புறம்பாக பண பரிவர்த்தனை நடைபெற்றதாக கடிதம் கொடுத்தார் என்று சொன்னால் அதை பற்றி எனக்கு தெரியாது. காரணம் நான் இந்த வங்கி கிளையில் மேலாளராக 01-06-2024 ல் சேர்ந்தேன். மேற்சொன்ன தனபால் பெயரில் உள்ள சேமிப்பு கணக்கின் கணக்கு விவரப்பட்டியல் 01-01-2018 முதல் 24-03-2026 வரையிலான காலத்திற்கு கொண்டு வந்துள்ளேன். அது **நீ.ம.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**1 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

தனபால் அவர்கள் தனது சேமிப்பு கணக்கிற்கு நாமினியாக சரஸ்வதி என்பவரை நியமித்துள்ளார் என்று சொன்னால் சரிதான். பொதுவாக கணக்கு வைத்திருப்பவர் இறந்து விட்டால் நாமினியிடம் செக்காகவோ, அல்லது தொகையாகவோ நாங்கள் கணக்கில் இருக்கும் தொகையை கொடுத்து விடுவோம்.

**(7 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லையென்று குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது)**

**மறு விசாரணை** இல்லை

sd/ ஜானேஸ்வரன்,

Taken down by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

Sd/G.Vijaya,
Principal District Judge,
Coimbatore.